ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

கவிச்சக்ரவர்தி கம்பர் இயற்றிய

# சடகோபர் அந்தாதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# சடகோபர் அந்தாதி

## சிறப்புப் பாயிரம்

தேவில் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்
பாவில் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே
நாவில் சிறந்த அம் மாறற்குத் தக்க நன் நாவலவன்
பூவில் சிறந்த ஆழ்வான் கம்ப நாட்டுப் புலமையனே

ஆரணத்தின் சிரம் மீதுறை சோதியை அந் தமிழால்
பாரணம் செய்தவனைக் குருகூரனைப் பற்பலவா
நாரணனாம் என ஏத்தித் தொழக் கவி நல்கு கொடைக்
காரணனைக் கம்பனை நினைவாம் உள் களிப்புறவே

நம் சடகோபனைப் பாடினையோ என்று நம் பெருமாள்
விஞ்சிய ஆதரத்தால் கேட்பக் கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொல் அந்தாதி கலித்துறை நூறும் தெரியும் வண்ணம்
நெஞ்சடியேற்கருள் வேதம் தமிழ் செய்த நின்மலனே

நாதன் அரங்கன் நயந்துரை என்ன நல் கம்பன் உன் தன்
பாதம் பரவிய பைந் தமிழ் நூறும் பரிவுடனே
ஓதும் படி எனக்குள்ளம் தனை அருள் ஓதரிய
வேதம் தமிழ் செய்த மெய்ப் பொருளே இதென் விண்ணப்பமே

## தன் சிறப்புப் பாயிரம்

மன்றே புகழும் திருவழுந்தூர் வள்ளல் மாறனை முன்
சென்றே மதுரகவிப் பெருமாள் தென் தமிழ்த் தொடையில்
ஒன்றே பதிகம் உரைத்தவன் பொன் அடி உற்று நின்றான்
என்றே பதிகம் பதிகம் அதாக இசைத்தனனே

## சடகோபர் அந்தாதி நூல்

வேதத்தின் முன் செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின் முன் செல்க குணம் கடந்த
போதக் கடல் எங்கள் தென் குருகூர்ப் புனிதன் கவி ஓர்
பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே ‖ **1** ‖

சுடர் இரண்டே பண்டு மூன்றாயின துகள் தீர்ந்துலகத்து
இடர் இரண்டாய் வரும் பேர் இருள் சீப்பன எம் பிறப்பை
அடர் இரண்டாம் மலர்த் தாள் உடையான் குருகைக்கரசன்
படர் இரும் கீர்த்திப் பிரான் திருவாய்மொழிப் பாவொடுமே ‖ **2** ‖

பா ஒடுக்கும் நுண் இசை ஒடுக்கும் பலவும் பறையும்
நா ஒடுக்கும் நல் அறிவொடுக்கும் மற்றும் நாட்டப் பட்ட
தே ஒடுக்கும் பர வாதச் செரு ஒடுக்கும் குருகூர்ப்
பூ ஒடுக்கும் அமுதத் திருவாயிரம் போந்தனவே ‖ **3** ‖

தனமாம் சிலர்க்குத் தவமாம் சிலர்க்குத் தரும நிறை
கனமாம் சிலர்க்கதற் காரணமாம் சிலர்க்காரணத்தின்
இனமாம் சிலர்க்கதற்கெல்லையுமாம் தொல்லை ஏர் வகுள
வனமாலை எம்பெருமான் குருகூர் மன்னன் வாய்மொழியே ‖ **4** ‖

மொழி பல ஆயின செப்பம் பிறந்தது முத்தி எய்தும்
வழி பல வாய விட்டொன்றா அது வழுவா நரகக்

குழி பல ஆயின பாழ் பட்டது குளிர் நீர்ப் பொருநை
    சுழி பல வாய் ஒழுகும் குருகூர் எந்தை தோன்றலினே ॥ **5** ॥

தோன்றா உபனிடதப் பொருள் தோன்றல் உற்றார் தமக்கும்
    சான்றாம் இவை என்ற போது மற்றென் பல காலும் தம்மின்
மூன்றாயினவும் நினைந்தாரணத்தின் மும்மைத் தமிழை
    ஈன்றான் குருகைப் பிரான் எம்பிரான் தன் இசைக் கவியே ॥ **6** ॥

கவிப்பா அமுதம் இசையின் கறியோடு கண்ணன் உண்ணக்
    குவிப்பான் குருகைப் பிரான் சடகோபன் குமரி கொண்கன்
புவிப் பாவலர் தம் பிரான் திருவாய்மொழி பூசுரர் தம்
    செவிப் பால் நுழைந்து புக்குள்ளத்துளே நின்று தித்திக்குமே ॥ **7** ॥

தித்திக்கும் மூலத் தெளியமுதே உண்டு தெய்வமென்பார்
    பத்திக்கு மூலப் பனுவற்கு மூலம் பவம் அறுப்பார்
முத்திக்கு மூலம் முளரிக்கை வாணகை மொய் குழலார்
    அத்திக்கு மூலம் குருகைப் பிரான் சொன்ன ஆயிரமே ॥ **8** ॥

ஆயிரம் மா மறைக்கும் அலங்காரம் அருந் தமிழ்க்குப்
    பாயிரம் நாற் கவிக்குப் படிச் சந்தம் பனுவற்கெல்லாம்
தாய் இரு நாற்றிசைக்குத் தனித் தீபம் தண்ணம் குருகூர்ச்
    சேயிரு மா மரபும் செவ்வியான் செய்த செய்யுட்களே ॥ **9** ॥

செய் ஓடருவிக் குருகைப் பிரான் திரு மாலை நங்கள்
    கை ஓர் கனி எனக் காட்டித் தந்தான் கழற்கே கமலம்
பெய்யோம் அவன் புகழ் ஏத்திப் பிதற்றிப் பித்தாய்த் திரியோம்
    ஐயோ அறிதும் என்றே உபகாரத்தின் ஆற்றலையே ॥ **10** ॥

ஆற்றில் பொதிந்த மணலின் தொகையரு மா மறைகள்
    வேற்றில் பொதிந்த பொருள்கள் எல்லாம் விழு மாக் கமலம்

சேற்றில் பொதி அவிழ்க்கும் குருகூரர் செஞ்சொற் பதிகம்
நூற்றில் பொதிந்த பொருள் ஒரு கூறு நுவல்கிலவே ॥ **11** ॥

இலவே இதழுளவே முல்லை உள் இயம்பும் மொழியும்
சிலவே அவை செழுந் தேனொக்குமே தமிழ்ச் செஞ்சொற்களால்
பல வேதமும் மொழிந்தான் குருகூர்ப் பதுமத்திரண்டு
சல வேல்களும் உளவே அது காண் என் தனி உயிரே ॥ **12** ॥

உயிர் உருக்கும் புக்குணர்வுருக்கும் உடலத்தினுள்ள
செயிர் உருக் கொண்ட நம் தீங்குருக்கும் திருடித் திருடித்
தயிர் உருக்கும் நெய்யொடுண்டான் அடிச் சடகோபன் சந்தோடு
அயிர் உருக்கும் பொருநல் குருகூர் எந்தை அந் தமிழே ॥ **13** ॥

அந்தம் இலா மறை ஆயிரத்தாழ்ந்த அரும் பொருளை
செந் தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் அழகும் என்னாம் தமிழார் கவியின்
பந்தம் விழா ஒழுகும் குருகூர் வந்த பண்ணவனே ॥ **14** ॥

பண்ணப் படுவனவும் உளவோ மறை என்று பல்லோர்
எண்ணப் படச் சொல் திகழச் செய்தான் இயலோடிசையின்
வண்ணப் படைக்குத் தனித் தலை வேந்தன் மலர் உகுத்த
சுண்ணப் படர் படப்பைக் குருகூர் வந்த சொல் கடலே ॥ **15** ॥

கடலைக் கலக்கி அமுதமரர்க்களித்தான் களித்தார்
குடலைக் கலக்கும் குளிர் சங்கினான் குறையா மறையின்
திடலைக் கலக்கித் திருவாய்மொழி எனும் தேனைத் தந்தான்
நடலைப் பிறப்பறுத்தென்னையும் ஆட் கொண்ட நாயகனே ॥ **16** ॥

நாய் போல் பிறர் கடை தோறும்
நுழைந்தவர் எச்சில் நச்சிப்

பேய் போல் திரியும்
    பிறவியினேனைப் பிறவி எனும்
நோய் போம் மருந்தென்னும்
    நுன் திருவாய்மொழி நோக்குவித்துத்
தாய் போல் உதவி செய்தாய்க்கடியேன்
    பண்டென் சாதித்ததே ‖ **17** ‖

சாதிக்குமே பர
    தத்துவத்தைச் சமயத் திருக்கை
சேதிக்குமே ஒன்று
    சிந்திக்குமே அதனைத் தெரியப்
போதிக்குமே எங்கும் ஓங்கிப் பொது
    நிற்கும் மெய்யைப் பொய்யைச்
சோதிக்குமே உங்கள் வேதம்
    எம் கோன் தமிழ்ச் சொல் எனவே ‖ **18** ‖

சொல் என்கேனோ
    முழு வேதச் சுருக்கென்கேனோ எவர்க்கும்
நெல் என்கேனோ
    உண்ணும் நீர் என்கேனோ மறை நேர் நிறுக்கும்
கல் என்கேனோ
    முதிர் ஞானக்கனி என்கேனோ புகல
வல் என்கேனோ
    குருகூர் எம்பிரான் சொன்ன மாலையையே ‖ **19** ‖

மாலைக் குழலியும் வில்லியும் மாறனை வாழ்த்தலர் போம்
    பாலைக் கடம் பகலே கடந்தேகிப் பணை மருதத்து

ஆலைக் கரும்பின் நரேல் என்னும் ஓசையை அஞ்சி அம் பொன்
சாலைக் கிளி உறங்காத் திரு நாட்டிடம் சார்வார்களே ‖ **20** ‖

சாரல் குறிஞ்சி தழுவும் பொழில் தளிர் மெல்லடித் தண்
மூரல் குறிஞ்சி நகை முகம் நோக்கற்கு நீ முடுகும்
சூரல் குறிஞ்சி நெறி நினை தோறும் துணுக்கெனுமால்
வாரல் குருகைப் பிரான் திரு ஆணை மலையவனே ‖ **21** ‖

மலை ஆரமும் கடல் ஆரமும் பன் மா மணி குயின்ற
விலை ஆரமும் விரவுந் திரு நாடனை வேலை சுட்ட
சிலையார் அமுதின் அடி சடகோபனைச் சென்றிறைஞ்சும்
தலையார் எவர் அவரே எம்மை ஆளும் தபோதனரே ‖ **22** ‖

போந்தேறுக என்றிமையோர் புகலினும் பூந்தொழுவின்
வேந்தேறடர்த்தவன் வீடே பெறினும் எழில் குருகூர்
நாம் தேறிய அறிவன் திருவாய்மொழி நாளும் நல்கும்
தீந் தேறலுண்டுழலும் சித்தியே வந்து சித்திக்குமே ‖ **23** ‖

சித்தர்க்கும் வேதச் சிரம் தெரிந்தோர்கட்கும் செய்தவர்க்கும்
சுத்தர்க்கும் மற்றைத் துறை துறந்தோர்கட்கும் தொண்டு செய்யும்
பத்தர்க்கும் ஞானப் பகவர்க்குமே அன்றிப் பண்டு சென்ற
முத்தர்க்கும் இன்னமுதம் சடகோபன் மொழித் தொகையே ‖ **24** ‖

தொகை உளவாய பனுவற்கெல்லாம் துறை தோறும் தொட்டால்
பகை உளவாம் மற்றும் பற்றுளவாம் பழ நான் மறையின்
வகை உளவாகிய வாதுளவாம் வந்த வந்திடத்தே
மிகை உளவாம் குருகூர் எம்பிரான் தன் விழுத் தமிழ்க்கே ‖ **25** ‖

விழுப்பார் இனி எம்மை யார் பிறவித் துயர் மெய் உற வந்து
அழுப்பாதொழிமின் அரு வினைகாள் உம்மை அப்புறத்தே

இழுப்பான் ஒருவன் வந்தின்று நின்றான் இள நாகு சங்கம்
கொழுப்பாய் மருதம் சுலாம் குருகூர் எம் குலக் கொழுந்தே ‖ **26** ‖

கொழுந்தோடிலையும் முகையும் எல்லாம்
கொய்யும் கொய்ம் மகிழ்க் கீழ்
விழுந்தோடுவதோர் சருகும்
பெறாள் விறல் மாறனென்றால்
அழும் தோள் தளரும்
மனமுருகும் குருகூர் அறையில்
எழுந்தோடவும் கருத்துண்டு
கெட்டேன் இவ்விளங்கொடிக்கே ‖ **27** ‖

கொடி எடுத்துக் கொண்டு நின்றேன்
இனிக் கொடும் கூற்றினுக்கோர்
அடி எடுத்துக் கொண்டென் பால்
வரல் ஆகும் கொல் ஆரணத்தின்
படி எடுத்துக் கொண்ட மாறன்
என்றால் பதுமக் கரங்கள்
முடி எடுத்துக் கொண்ட
அந்தணர் தாள் என் முடி எனவே ‖ **28** ‖

என் முடியாதெனக்கு யாதே அரியதிராவணன் தன்
பொன் முடியால் கடல் தூர்த்த வில்லான் பொருநைத் துறைவன்
தன் முடியால் அவன் தாள் இணைக் கீழ் எப் பொருளும் தழீஇச்
சொல் முடியால் அமுதக் கவி ஆயிரம் சூட்டினனே ‖ **29** ‖

சூட்டில் குருகுறங்கும் குருகூர் தொழுதேன் வழுதி
நாட்டில் பிறந்தவர்க்காளும் செய்தேன் என்னை நல் வினையாம்

காட்டில் புகுத விட்டுய்யக் கொள் மாறன் கழல் பற்றிப் போய்
வீட்டில் புகுதற்கும் உண்டே குறை மறை மெய் எனிலே ‖ **30** ‖

மெய்யும் மெய் ஆயது பொய்யும் பொய் ஆயது வேறு படுத்து
உய்யும் மெய்யாய உபாயம் வந்துற்றதுறு வினையைக்
கொய்யும் மெய் வாள் வலவன் குருகைக்கரசன் புலமை
செய்யும் ஐயன் தனக்கே தனித் தாளன்பு செய்த பின்னே ‖ **31** ‖

செய்யன் கரியன்
எனத் திருமாலைத் தெரிந்துணர
வையம் கரியல்ல மாட்டா
மறை மதுரக் குருகூர்
ஐயன் கவி அல்லவேல்
பிறவிக் கடலாழ்வதல்லால்
உய்யும் வகை ஒன்றும் யான்
கண்டிலேன் இவ்வுயிர்களுக்கே ‖ **32** ‖

உயிர்த் தாரையில் புக்குறு
குறும்பாம் ஒரு மூன்றனையும்
செயிர்த்தார் குருகை வந்தார்
திருவாய்மொழி செப்பலுற்றால்
மயிர்த் தாரைகள் பொடிக்கும்
கண்கள் நீர் மல்கும் மா மறையுள்
அயிர்த்தார் அயிர்த்த பொருள்
வெளியாம் எங்கள் அந்தணர்க்கே ‖ **33** ‖

அந்தணர்க்கோ நல் அருந்தவர்க்கோ அன்றி யோகியராய்
வந்தவர்க்கோ மறம் வாதியர்க்கோ மகரக் குழை சேர்

சுந்தரத் தோளனுக்கோ அவன் தொண்டர்கட்கோ சுடர் தோய்
    சந்தனச் சோலைக் குருகைப் பிரான் வந்து சந்தித்ததே ‖ **34** ‖

சந்தியும் சந்திப் பதமும் அவை தம்மிலே தழைக்கும்
    பந்தியும் பல் அலங்காரப் பொருளும் பயிலுகிற்பீர்
வந்தியும் வந்திப்பவரை வணங்கும் வகை அறிவீர்
    சிந்தியும் தென் குருகூர் தொழுதாட்செய்யும் தேவரையே ‖ **35** ‖

தேவரை ஏறிய மூதறிவாட்டியைச் சீரழித்தீர்
    பூவரை ஏறிய கோதை உள்ளம் புகுந்தார் எவரென்று
ஏவரை ஏறி மொழிகின்ற போதியம்பிற்றிறைவர்
    மூவரையோ குருகூரரையோ சொல்லும் முந்துறவே ‖ **36** ‖

துறவாதவர்க்கும் துறந்தவர்க்கும்
    சொல்லவே சுரக்கும்
அறவா அவை இங்கோர் ஆயிரம்
    நிற்க அந்தோ சிலர் போய்
மற வாதியர் சொன்ன வாசகமாம்
    மலட்டாவைப் பற்றி
கறவாக் கிடப்பர் அங்கென்
    பெறவோ தங்கள் கை வலிப்பே ‖ **37** ‖

கை தலைப் பெய்தரும் பூசலிட்டுக் கவியால் உலகை
    உய்தலைச் செய்ததும் பொய் என்றுமோ சென்றவ்வூர் அறிய
வைதலைத்தேசுதுமோ குருகூர் என்னும் ஆறறியாப்
    பைதலைக் கோகுகட்டிட்டேட்டில் ஏற்றிய பண்பனையே ‖ **38** ‖

பண்ணும் தமிழும் தவம் செய்தன பழ நான்மறையும்
    மண்ணும் விசும்பும் தவம் செய்தன மகிழ் மாறன் செய்யுள்

எண்ணும் தகைமைக்குரிய மெய் யோகியர் ஞானம் என்னும்
கண்ணும் மனமும் செவியும் தவம் செய்த காலத்திலே ॥ **39** ॥

காலத்திலே குருகூர் புக்குக் கைக் கொண்மினோ கடை நாள்
ஆலத்திலே துயின்றோர் கொண்ட ஐயிரண்டாய் அமைந்த
கோலத்திலே முளைத்துக் கொழுந்தோடிக் குணம் கடந்த
மூலத்திலே செல்ல மூட்டிய ஞானத்தெம் மூர்த்தியையே ॥ **40** ॥

மூர்த்தத்தினை இம் முழு ஏழ்
உலகும் முழுகுகின்ற
தீர்த்தத்தினைச் செய்ய
வேதத்தினைத் திருமால் பெருமை
பார்த்தற்கருளிய பாரதத்தைப்
பணித்தானும் நின்ற
வார்த்தைக் குருகைப் பிரானும்
கண்டான் அம் மறைப் பொருளே ॥ **41** ॥

பொருளைச் சுவை என்று போவதெங்கே குருகூர்ப் புனிதன்
அருளைச் சுமந்தவள் கண்ணின் கடை திறந்தாறுபட்டுக்
குருளைச் சுமந்து வெளி பரந்தோட்டரும் கொள்ளை வெள்ளம்
உருளைச் சுடர் மணித் தேரை அந்தோ வந்துதைக்கின்றதே ॥ **42** ॥

வந்தடிக் கொண்டன கொங்கைகள் மாறன் குருகை வஞ்சி
கொந்தடிக் கொண்ட குழலும் கலையும் குலைந்தலைய
பந்தடிக்குந் தொறும் நெஞ்சம் பறை அடிக்கின்றதென்றால்
செந் தடித்தன்ன மருங்கிற்குண்டோ நிற்கும் சிக்கனவே ॥ **43** ॥

கன வாயினவும் துரியமும் ஆயவையும் கடந்து
மன வாசகங்களை வீசிய மாறனை மா மறையை

வினவாதுணர்ந்த விரகனை வெவ்வினையைத் தொலைத்த
    சின வாரணத்தைக் குருகைக்கரசனைச் சேர்ந்தனமே ॥ **44** ॥

சேராதன உளவோ பெருஞ்செல்வர்க்கு வேதம் செப்பும்
    பேராயிரம் திண் பெரும் புயம் ஆயிரம் பெய் துளவத்
தாரார் முடியாயிரம் குருகூர்ச் சடகோபன் சொன்ன
    ஆரா அமுதக் கவி ஆயிரம் அவ்வரியினுக்கே ॥ **45** ॥

அரிவளை பொன் மகிழ் ஆயிழைக்கீயும் கொல் அந்தி வந்து
    முரிவளை முத்தும் சினையும் மயங்க முறை செறுத்து
வரி வளையும் அன்னமும் தம்மிலே வழக்காட வலம்
    புரிவளை ஊடறுக்கும் குருகூர் எம் புரவலனே ॥ **46** ॥

புரை துடைத்துப்
    பெரும் பொய்யும் துடைத்துப் பிறர் புகலும்
உரை துடைத்தங்குள்ள
    ஊசல் துடைத்தெம் உறு பிறவித்
துரை துடைத்தாட்கொண்ட
    தொண்டர் பிரான் துறை நீர்ப் பொருநைக்
கரை துடைக்கும் கடலே
    துடையேல் அன்பர் கால் சுவடே ॥ **47** ॥

சுவடிறக்கத் தொடர் ஆசைக் களிற்றைத் தொடர்ந்திரண்டு
    கவடிறக் கட்டிய பாசத் தளைக் கண் பரிந்து சங்கக்
குவடிறக் குத்திய மாறப் பெயர்க் கொலையானை நங்காய்
    இவடிறத்தொன்றும் படர் அந்திவானம் இருள்கின்றதே ॥ **48** ॥

இருளாய்ப் பரந்த உலகங்களை விளக்கும் இரவி
    பொருளாய்ப் பரந்தது தான் பொது நிற்றலின் மற்றது போல்

மருளாய்ப் பரந்த மயக்கத் துயக்கற்ற மாறன் எம் கோன்
அருளால் சமயம் எல்லாம் பரன் உண்டென்றறிவுற்றதே ‖ **49** ‖

அறிவே உனைத் தொழுதேன்
மற்றை ஆகம வாதியரைச்
செறிவேன் என ஒன்று சிந்தை
செய்யாது செய்தாரை இல்லா
நெறி வேத நின்ற
நிலை உணர்ந்தோன் குருகூர் நிலத்தைப்
பிறிவேன் எனவும் எண்ணாதென்னை
வீடு பெறுத்தினையே ‖ **50** ‖

பெறும் பாக்கியம் உள்ள போதும்
பிழைப்பும் உண்டே பிறர் பால்
வெறும் பாக் கிளத்தி மெலிகின்ற
என்னை வினை கொடுப் போய்
எறும்பாக்கிய தமியேனை
அமரர்க்கும் ஏற விட்டான்
குறும்பாக்கிய முப்பகை
தவிர்த்தாண்ட குருகை மன்னே ‖ **51** ‖

குருகூர் நகர் எம்பிரான் அடியாரோடும் கூடி அன்புற்று
ஒரு கூரையில் உறைவார்க்கும் உண்டே எம்மை உள்ளும் சுற்றும்
இருகூர் வினையும் அறுத்திறப்பார்க்கும் இயற்கை அவ்வூர்
அருகூர் அருகில் அயல் அயலார்க்கும் அரியதன்றே ‖ **52** ‖

அன்றாத அன்றிலையும்
அன்றுவித்தென்னை அன்னை உடன்
பின்றாத வண்ணம் எல்லாம்

பின்றுவித்துப் பிறைக் கொழுந்தை
ஒன்றாத வண்ணம் உபாயம்
இயற்றியதூழ் வினையை
வென்றான் குருகைப் பிரான்
மகிழே அன்றி வேறில்லையே ॥ **53** ॥

வேறே நமக்கிவன்
அன்புடை மெய்யடியான் என்றுள்ளம்
தேறேன் எனலது தேறத் தகும்
செந் தமிழ்ப் புலவர்க்கு
ஏறே எதிகளுக்கின்னமுதே
எறி நீர்ப் பொருநை
ஆறே தொடர் குருகூர் மறையோர்
பெற்ற ஆணிப் பொன்னே ॥ **54** ॥

பொன்னை உரைப்பதப் பொன்னொடன்றே புலமைக்கொருவர்
உன்னை உரைத்துரைத்தற்குளரோ உயர் நாற்கவியும்
பின்னை உரைக்கப் பெறுவதல்லால் பெருந் தண் குருகூர்
தென்னை உரைக்கும் இயற்கும் இசைக்கும் சிகாமணியே ॥ **55** ॥

மணித்தார் அரசன்
தன் ஓலையைத் தூதுவன் வாய் வழியே
திணித்தாசழியச் சிதைமின்
தலையை எம் தீ வினையைத்
துணித்தான் குருகைப் பிரான்
தமிழால் சுருதிப் பொருளைப்
பணித்தான் பணி அன்றெனில்
கொள்ளும் கொள்ளும் எம் பாவையையே ॥ **56** ॥

பாவைத் திருவாய்மொழிப்
    பழத்தைப் பசும் கற்பகத்தின்
பூவைப் பொரு கடல் போதா
    அமுதைப் பொருள் சுரக்கும்
கோவைப் பணித்த எம் கோவை அல்லா
    என்னைக் குற்றம் கண்டென்
நாவைப் பறிப்பினும்
    நல்லர் அன்றோ மற்றை நாவலரே ‖ **57** ‖

நாவலந் தீவில் கவிகள்
    எல்லாம் சில நாள் கழியப்
பூவலந் தீவது போல்வ
    அல்லால் குருகூர்ப் புலவன்
கேவலந் தீங்கறுப்பான்
    கவி போல் எங்கும் போய்க் கெழுமிக்
கூவலந் தீம் புனலும்
    கொள்ளுமே வெள்ளம் கோளிழைத்தே ‖ **58** ‖

இழைத்தார் ஒருவரும் இல்லா
    மறைகளை இன் தமிழால்
குழைத்தார் குருகையிற் கூட்டம்
    கொண்டார் குமரித் துறைவர்
மழைத்தார் தடக் கைகளால் என்னை
    வானின் வரம்பிடை நின்று
அழைத்தார் அறிவும் தந்தார்
    அங்கும் போயவர்க்காட்செய்வனே ‖ **59** ‖

ஆட்செய்யலாவதெல்லாம் செய்தடி அடைந்தேன் அதன்றித்
தாட்செய்ய தாமரை என் தலை ஏற்றனன் தண் குருகூர்
நாட்செய்ய பூந்தொடை மாறன் என்றேன் இனி நாட் குறித்துக்
கோட்செய்யலாவதுண்டே என்றனாருயிர் கூற்றினுக்கே ॥ **60** ॥

கூறப் படா மறையின் பொருள்
கூறிக் குவலயத்தோர்
மாறப் படா வினை மாற்றிய
மாறன் மகிழலங்கல்
நாறப் படா நின்ற
போதமுதாகும் அதன்றி நஞ்சம்
தேறப் படாது கெட்டேன் மன்றல்
நாறும் தண் தென்றலையே ॥ **61** ॥

தென்றலைத் தோன்றும் உபநிடதத்தை என் தீ வினையை
நின்றலைத் தோன்றும் நியாய நெறியை நிறை குருகூர்
மன்றலைத் தோன்றும் மதுரகவியை மனத்துள் வைப்பார்
என்றலைத் தோன்றெம்பிராற்கள் என் நாவுக்குரியவரே ॥ **62** ॥

உரிக்கின்ற கோடலின் உந்து
கந்தம் என ஒன்றுமின்றி
விரிக்குந் தொறும் வெறும் பாழாய்
விடும் பிறர் புன் கவி மெய்
தெரிக்கின்ற கோச் சடகோபன்
தன் தெய்வக் கவி புவியில்
சுரிக்கின்ற நுண் மணல்
ஊற்றொக்கும் தோண்டச் சுரத்தலினே ॥ **63** ॥

சுரக்கும் திருவும் வறுமையும் தீரும் தொடக்கு விட்டுக்
கரக்கும் இருவினை மேன்மையும் காணும் கயல் குதிப்பத்
திரக்கும் கழை நெடுந் தாளில் தொடுத்த செந் தேனுடைந்து
பரக்கும் பழன வயல் குருகூர் வளம் பாடுமினே ॥ **64** ॥

பாடும் கறங்கும் சிறை வண்டு பாடப் பைந் தாள் குவளைத்
தோடும் கறங்கும் குருகைப் பிரான் இச்சுழல் பிறவி
ஓடும் கறங்கன்ன வாழ்க்கையை நீக்கி உணர்வுதவி
வீடும் திறந்து தந்தானை எந்நான்றும் விடகிலமே ॥ **65** ॥

விடவந்தகார வெம் பாலிற் பராங்குசர் மெல்லியலுக்கு
இடர் வந்ததால் என்றிரங்கிப் புணர்ந்திலர் இன்னுயிரை
அடவந்த காலன் கொலோ அறியேன் இன்றிவ்வந்தி வந்து
படவந்தகாரப் பெரும் புகை ஓடிப் பரக்கின்றதே ॥ **66** ॥

பரவாது கேட்டினிப் பைய நட சுருதிப் பசுக்கள்
சுரவாதவற்றைச் சுரப்பித்தவை சொரியும் பொருள் பால்
கரவாதுதவிய மாறன் கவி அனையாய் இனி ஓர்
சரவாதம் இப்புறம் அப்புறம் காண் அத்தடம் பணையே ॥ **67** ॥

தடம் பணைத் தண் பொருநைக்
குருகூரர் தகை வகுள
வடம் பணைக் கொங்கையில்
வைக்கின்றிலர் மற்றை மாலை எல்லாம்
உடம்பணைக்குந் தொறும் வெந்துகும்
ஐந்து வெம் பாம்புமிழ்ந்த
விடம் பணைக் கொண்டனவே
பனி தோய்ந்திடு மேகங்களே ॥ **68** ॥

மேகத்தை ஆற்றில் கண்டேன்
    என்றெண்ணாது மெய்யன் குருகூர்ப்
பாகத்தை ஆற்றும்
    சொல்லாளைக் கண்ணீரின் துளி பரந்த
மோகத்தை ஆற்றிக் கொண்டே
    கண்ட மாற்றம் மொழிந்து சிந்தைச்
சோகத்தை ஆற்றிக் கொண்டே
    துளித் தூவத் தொடங்குகவே ‖ **69** ‖

தொடங்குகின்றாள் நடம்
    சொல்லுகின்றேன் குருகூரர் தொழா
மடங்குகின்றாள் மண்டலம்
    சுற்றி ஆடுகின்றாள் மதங்கி
விடங்கு கண்டார் பிழைப்பார்
    சவையீர் விரைந்தேகும் இந்தப்
படங்கு விண்டால் பின்னைப் போக
    ஒண்ணாதும் பதிகளுக்கே ‖ **70** ‖

பதியந் தமிழ் என்ன நான்மறை என்ன இப் பார் புரக்கும்
    மதியந் தமிழ் ஒளி மாலைகள் என்ன மறை தமிழின்
அதியந் தரும் கவி ஆயிரம் செய்தளித்தான் அமுதம்
    பொதியந் தருநதி அம் குருகூர் எந்தை பூசுரர்க்கே ‖ **71** ‖

பூட்சி கண்டீர் பொய்ச் சமயப் புலவர்க்குப் போக்கு வல்வாய்
    வாட்சி கண்டீர் மற்றை மாயத்தருகர்க்கு மன் உயிர்கட்கு
ஆட்சி கண்டீர் தொண்டர்க்கானந்த வாரி கண்டீர் அறிவைக்
    காட்சி கண்டீர் பரவும் குருகூர் வந்த கற்பகமே ‖ **72** ‖

கற்றும் செவி உறக் கேட்டும்
    பருகிக் களித்தும் உள்ளே
முற்றும் உகப்பெய்தும்
    மூழ்கிக் குடைதும் முகந்து கொடு
நிற்றும் நிலையுற நீந்துதும்
    யாம் நிதம் மாறனெம்மை
விற்றும் விலை கொள்ளவும்
    உரியான் கவி வெள்ளத்தையே ॥ **73** ॥

வெள்ளம் பரந்தனவோ கமலத்தன்றி வெண் மதி மேல்
    கள்ளம் பரந்தனவோ முயல் நீக்கிக் கவிக்கரசன்
தெள்ளம் பரந்த வயல் குருகூர்க் கொம்பின் செம் முகத்தெம்
    உள்ளம் பரந்தனவோ கண்களோ ஒன்றும் ஓர்கிலமே ॥ **74** ॥

ஓரும் தகைமைக்குரியாரும் ஓங்கிய ஞானியரும்
    சாரும் தனித்தலைவன் சடகோபன் தடம் பதிக்கே
வாரும் உமக்கோர் உறுதி சொன்னேன் உம் மயக்கம் எல்லாம்
    தீரும் திருக்கறும் சிந்தை செவ்வே நிற்கும் தீங்கறுமே ॥ **75** ॥

அறு வகையாய சமயமும்
    ஐவகைத் தாம்புலனும்
உறு வகையால் சொன்ன ஓட்டம்
    எல்லாம் ஒழிவித்தொருங்கே
பெறு வகை ஆறெனச் செய்த
    பிரான் குருகூர்ப் பிறந்த
சிறு வகையார் அவரைத் தொழுதோம்
    எம்மைத் தீண்டுகவே ॥ **76** ॥

தீண்டித் திருவடியைப் பற்றிக் கொண்டு சிந்தித்ததையே
    வேண்டிக் கொளப் பெற்றிலேன் வினையேன் இவ்வெறும் பிறவி
ஆண்டில் பிறந்த அக் காலத்திலே அன்பனாய் அணி நீர்ப்
    பாண்டித் தமிழ்த் திரு நாட்டுருக் காட்டிய பாவகற்கே ‖ **77** ‖

பாவகத்தால் தன் திரு அவதாரம் பதினொன்றென்றிப்
    பூவகத்தார் அறியாத வண்ணம் தன்னையே புகழ்ந்து
நாவகத்தால் கவி ஆயிரம் பாடி நடித்தளித்த
    கோவகத்தாற்கன்றி என் புறத்தார் செய் குற்றேவல்களே ‖ **78** ‖

குற்றேவலும் செய்தும் மெய் கண்டு கை கொண்டு கும்பிட்டன்பு
    பெற்றேன் என் போல் எவர் பேறு பெற்றார் பின்னையே பிறந்து
வெற்றேவலின் நின்ற பொய்யன்பர் தாங்களும் மெய் உணர்ந்தார்
    எற்றே குருகைப் பிரான் எம்பிரான் தன் இயலிசைக்கே ‖ **79** ‖

இயலைத் தொடுத்தின்னிசையைப் புணர்த்தெம்மை இப்பிறவி
    மயலைத் துடைத்த பிரான் குருகூர் மதியைக் கொணர்ந்து
முயலைத் துடைத்துத் தனுவைப் பதித்து முத்தம் குயிற்றிக்
    கயலைக் கிடத்திக் கொல் சாளரத்தூடு கதவிட்டதே ‖ **80** ‖

இட்டத்திலும் தம் தம் உள்ளத்திலும் எண்ணிலும் இருப்பின்
    கிட்டத்திலும் வலியாரும் உருகுவர் கேணியிலும்
பட்டத்திலும் பைந் தடத்திலும் ஓடைப் பழனத்திலும்
    குட்டத்திலும் கயல் பாய் குருகூரர் குணங்களுக்கே ‖ **81** ‖

குணம் வேண்டுமே
    நற் குலம் வேண்டுமே அக்குலத்தொழுக்காம்
பிணம் வேண்டுமே
    செல்வப் பேய் வேண்டுமே பெருந் தண் வகுள

மணம் வேண்டுந் தண் தெரியல்
    பெருமான் செய்யுள் மா மணியின்
கணம் வேண்டும் என்றறிவாரைக் கண்டால்
    சென்று கைத் தொழுமே ‖ **82** ‖

தொழும் பாக்கிய வினைத் தொல்லைப் பிறவிச் சுழியிடை நின்று
    எழும் பாக்கியம் உடைத்தாக்கவும் தென்னியலோடிசைந்து
கெழும் பாக் கெழுமிய கீர்த்தியை நாளும் கிளத்தி என் நாத்
    தழும்பாக்கவும் வல்ல கோ சடகோபன் தயாபரனே ‖ **83** ‖

பரந்தலைக்கும் பொருநைக்
    குருகூரென்னில் கண் பனிக்கும்
கரம் தலைக் கொள்ளும் உள்ளும்
    உருகும் கவியால் உலகைப்
புரந்தலைக்கும் வினை தீர்த்தான்
    புனை மகிழ் பூவுமன்றி
மரம் தலைக் கொள்ளவும் போதும்
    நங்காய் உன் மகள் கருத்தே ‖ **84** ‖

கருத்தில் கருணை வைத்தேகும் இதுவும் கலை மறையோர்
    திருத்திற்றொரு மணம் தீரும் தின மயல் நீரின் நிறை
முருத்தின் செருந்தயலே இவளோடு முயற் கரும்பின்
    குருத்தில் பிரசம் வைக்கும் குருகூர் சென்று கூடுமினே ‖ **85** ‖

கூட்டங்கள் தோறும்
    குருகைப் பிரான் குணம் கூறுமன்பர்
ஈட்டங்கள் தோறும்
    இருக்கப் பெற்றேம் இருந்தெம்முடைய
நாட்டங்கள் தோறும் புனல் வந்து

நாலப் பெற்றேம் இனி மேல்
வீட்டெங்கள் தோழர்க்கென்றே
பெரும் போகம் விளைகின்றதே ‖ **86** ‖

விளையாதொழிய மருந்தும் உண்டே எம் வினை தினையின்
கிளையாக் கிளர விளைகின்றதால் கிளையாம் பிறவித்
தளையாசழியத் தடுத்துத் தென் பாலை வழி தடுத்துக்
களையாசறத் தடுத்தாண்டான் குருகையின் காப்புனமே ‖ **87** ‖

புனம் பாழ் படுத்துப்
புகழ் பாழ் படுத்ததல்லால் புகுந்தென்
மனம் பாழ் படுத்தனை வாழ்தி
அன்றே வழுவா நரகத்து
இனம் பாழ் படுத்த
பிரான் சடகோபன் இன்னாக் கலியின்
சினம் பாழ் படுத்த நின்றான்
குன்று சூழ்கின்ற செந்தினையே ‖ **88** ‖

தினை ஒன்றிய குற்றம் அற்றுணர்ந்தோர் மகிழின் திறத்தின்
மனை ஒன்றிய கொடியாள் துயின்றாலும் தன் வாய் அடங்கா
வினை ஒன்றிய அன்றிலுக்கிடம் காட்ட விரிதலைய
பனை அன்றியும் உளதோ தமியேற்குப் பழம் பகையே ‖ **89** ‖

பகையாய் வருகின்ற மூன்றையும்
வேரினோடும் பறித்து
வகையாய் வருவன யாவையும்
மாற்றி இவ்வையமுய்யத்
தொகை ஆயிரம் கவி சொன்னோன்
பெயர் சொல்லச் சூழ் பனியின்

புகையாம் இருள் பின்னை
    எந்நாள் கழியப் புகுகின்றதே ॥ **90** ॥

புகுகின்றது இருள் போகின்றது
    வண்ணம் பூவை கண்ணீர்
உகுகின்றதென்றுயிர்
    ஓய்கின்றதால் உலகேழுமுய்யத்
தொகுகின்ற ஆயிரம் சொன்னோன்
    குருகைச் சொல்லால் விளங்கத்
தகுகின்றனர் அல்லர்
    மேன் மேலும் காதல் தருமவரே ॥ **91** ॥

தருமமும் காமமும் தாவில் அரும் பொருளுந் தணவாக்
    கருமமும் ஆகிய காரணம் கண்ட அக் காரணத்தின்
பெருமையும் மாயப் பிணக்கும் தவிர்ந்துறு பேதம் செய்யும்
    இருமையும் தீர்ந்த பிரான் சடகோபன் தன் இன்னருளே ॥ **92** ॥

அருளில் சில மகிழ் ஆயிழைக்கீவர் கொல் அந்தி வந்த
    இருளில் பிறிது துயரும் உண்டோ இயலோடிசையின்
பொருளில் சிறந்த அலங்கார வல்லியின் போக்கில் உள்ளம்
    தெருளின் கரும்பொக்கும் ஆயிரம் பாப்பண்டு செய்தவரே ॥ **93** ॥

அவரே அயற்கும் அரற்கும் அல்லா அமரர்க்கும் எல்லாம்
    பவரே கை உற்று என் பணி கொள்ளுமோ படர் நீரின் இட்ட
நவரேகை உட்கொள்ளச் செய்ததல்லால் நம்பி மாறனைப் போல்
    எவரே திருவாயிரம் மோக்க மாலை இசைத்தவரே ॥ **94** ॥

தவம் செய்வதும் தழல் வேள்வி
    முடிப்பதும் தம்மை ஒறுத்து

எவன் செய்யும் மெய்யன்
குருகைப் பிரான் எம்மை இன்னமொரு
பவம் செய்கை மாற்றிய பண்டிதன்
வண் தமிழ்ப் பாவும் உண்டே
அவம் செய்கை மாற்றச் செவி
உண்டு நா உண்டறிவுமுண்டே ‖ **95** ‖

உண்டாட்டியலும் திருமால் உருவை உயர்த்துலகைத்
தொண்டாட்டிய வந்து தோன்றிய தோன்றல் துறைக் குருகூர்
நண்டாட்டிய நங்கை நாட்டங்களால் இந்த நாட்டை எல்லாம்
திண்டாட்டிய கண்கள் போல் செய்யுமோ கயல் தீங்குகளே ‖ **96** ‖

தீயைக் கிழித்தொரு திங்கள் கொழுந்தெனச் செய்ததல்லால்
பேயைக் கிழித்தென அன்றில் பனை பிளவார் உளவாம்
நோயைக் கிழிக்கும் வகுள நல்கார் இந்த நுண் பிறவி
மாயைக் கிழியைக் கிழித்தெம்மை வாங்கிட வல்லவரே ‖ **97** ‖

வல்லம் புலி முக வாயில் கரும்பின் மறு பிறப்பைக்
கொல்லம் புலியோர் வகுளம் கொடார் கொடும் கோகுகட்டிச்
சல்லம் புலி இட்டெதிரிடப் பாய்வது தாயென்றிங்கோர்
இல்லம் புலியும் உண்டு அம்புலி மீள எழுகின்றதே ‖ **98** ‖

எழுதிய நாளும் வினையும் தொகுத்தெம்மை இப்பிறவிப்
புழுதியில் நாற்றிட்டு வைப்பரிதால் புகழ் மெய்ப் புலவோர்
தொழுதியல் நாயகன் ஓதும் கனல் துறை நீர்ப் பொருநை
வழுதி நன்னாடன் திருவாய்மொழி எம் மனத்தனவே ‖ **99** ‖

மனையும் பெருஞ்செல்வமும் மக்களும் மற்றை வாழ்வும் தன்னை
நினையும் பதம் என நின்ற பிரான் குருகூர் நிமலன்

புனையும் தமிழ்க் கவியால் இருள் நீங்கிப் பொருள் விளங்கி
வினையும் திரிவுற்றன குற்றம் நீங்கின வேதங்களே ॥ **100** ॥

**சடகோபர் அந்தாதி முற்றிற்று**

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்